**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண் 1900 /ஆ4/2026 நாள் 05.08.2026**

பொருள் : தேர்வுகள்–வேலூர் மாவட்டம் –10,,12ம் வகுப்பு மாணவர்களுக்கு சிறு தேர்வு (Slip Test ) – 10.08.2026 முதல் நடைபெறுதல் மற்றும் சிருதேர்வுகளுக்கான பாடத்திட்டம் பள்ளிகளுக்கு தெரிவித்தல் – தொடர்பாக

அனைத்து வகை அரசு உயர்/மேல்நிலை/அரசு நிதியுதவி பள்ளிகளில் பயிலும் 10,12ம் வகுப்பு மாணவர்களுக்கு சிறு தேர்வுகள் வரும் 10.08.2026 முதல் நடைபெறவுள்ளது.

மேலும் சிறு தேர்வு –1 –க்கான அட்டவணை மற்றும் பத்தாம் மற்றும் மற்றும் பனிரெண்டாம் வகுப்பிற்கான சிறுதேர்வு பாடத்திட்டங்கள் (SYLLABUS ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது .மேற்காண் விவரத்தினை அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளி ஆசிரியர்கள் வாயிலாக அனைத்து மாணவர்கள் / பெற்றோர்கள் அறியும் வகையில் அறிவிப்பு பலகையில் ஒட்டியும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- 10.08.2026 அன்று முதல் சிறு தேர்வு–1 வினாக்கள் Edwise Vellore–>Website –ல் பதிவிறக்கம் செய்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- மேலும் Slip Test நடைபெற்று முடிந்த மறுதினமே ஆசிரியர்கள் விடைத்தாள் திருத்தம் செய்து மாணவர்களுக்கு வழங்கப்படுவதை தலைமை ஆசிரியர்கள் உறுதிசெய்திட வேண்டும்.

- சிறு தேர்வில் மாணவர்கள் தேர்ச்சி விவரங்களை முதன்மைக் கல்வி அலுவலகத்தால் அனுப்பப்படும் Google Sheet –ல் சிறு தேர்வுகள் முடிவுற்ற அன்றைய தினமே தலைமை ஆசிரியர்கள் மறுநினைவூட்டிற்கு இடமளிக்காமல் பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

- சிறுதேர்வு நடத்தப்படுவது மாணவர்கள் படிப்பில் ஆர்வத்துடன் கவனம் செலுத்துவதற்கும், மாணவ/மாணவிகள் முயற்சியினை கைவிடாமல் பொதுத்தேர்வினை எளிதாக அணுகிட ஏதுவாக அமைவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதனை கருத்தில் கொண்டு ஆசிரியர்கள் சிறுதேர்வினை நடத்திட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:

1. Slip Test Syllabus அட்டவணை
2. Slip test –1 Time table

//ஓம்.//
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்.

பெறுநர்:

அனைத்து வகை (அரசு/நகரவை /ஆதிதிராவிட நலம்/ நிதியுதவி/ மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்:

- மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் தெரிவிக்கலாகிறது.
- மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி) அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
- வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிவுடன் அனுப்பிவைக்கப்படுகிறது .